| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| திரு. சா.சேதுராம வர்மா | அனைத்து முதன்மைக் கல்வி |
| அரசுத் தேர்வுகள் இயக்குநர், | அலுவலர்கள் |
| சென்னை – 600 006. | |

**ந.க.எண். 012929 /டி(3) /2023** **நாள் : 10.10.2023**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு, அக்டோபர் 2023 – தேர்விற்கான அறிவுரைகள் வழங்குவது குறித்து.

– – – –

15.10.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறவுள்ள "தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்விற்கான" தேர்வு மையங்களின் பட்டியல் ஏற்கனவே தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்காண் தேர்வு நடத்துவது குறித்து கீழ்க்காண் அறிவுரைகளை அனைத்து தேர்வுமைய முதன்மைக் கண்காணிப்பாளர்களும் தவறாமல் கடைபிடிக்க உரிய அறிவுரைகளை வழங்கிடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு, 15.10.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை நடைபெறும்.தேர்வு முடியும் வரை எக்காரணம் கொண்டும் தேர்வர்களைத் தேர்வு மையத்தினை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாது.

1. **தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் தங்கள் மையத்திற்கான பெயர்ப்பட்டியல், தேவையான வினாத்தாள் மற்றும் OMR விடைத்தாட்கள் பெறப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள உரிய அறிவுரை வழங்க வேண்டும்.**
2. **தமிழ் மொழிப்பாட ஆசிரியர்களை தேர்வறை கண்காணிப்பாளராக நியமித்தல் கூடாது.**
3. ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 20 மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 20 வினாத்தாள் மற்றும் விடைத்தாட்கள் மட்டுமே வழங்கப்படும். எனவே, எக்காரணம் கொண்டும் 20 மாணவர்களுக்கு மேல் ஒரு தேர்வறையில் அமர அனுமதிக்கக்கூடாது. (கடைசி அறை தவிர).
4. **வினாத்தாள் கட்டுக்களை தேர்வு மையத்தில் காலை 8.45 மணிக்குள் சென்றடையும் வண்ணம் வினாத்தாள் கட்டுகாப்பு மையத்திலிருந்து வழித்தட அலுவலர்கள் பெற்று சம்பந்தப்பட்ட தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளரிடம் / துறை அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.**
5. **வழித்தட அலுவலர்கள் முதலில் வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திற்கு சென்று வினாத்தாள் கட்டுகளை பெற்று காலை 8.45 மணிக்குள் தேர்வு மையத்திற்கு சென்றடைய அறிவுறுத்த வேண்டும்.**

6. தேர்விற்கான வினாத்தாள் தேர்வு துவங்குவதற்கு கால் மணி நேரம் முன்னதாக அதாவது காலை 9.45 மணிக்கு பிரிக்கப்பட்டு முறையே காலை 10.00 மணிக்கு தேர்வர்களுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும்.

7. தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு (Admission Card) உள்ள தேர்வர்கள் மற்றும் பெயர் பட்டியலில் பெயர் உள்ள தேர்வர்களை மட்டும் தேர்விற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.தேவையற்ற குழப்பங்களைத் தவிர்க்கும்பொருட்டு புறச்சரக எண்ணில் தேர்வெழுத அனுமதி வழங்க வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது.

8. தேர்விற்கு வருகைபுரிந்த தேர்வர்களின் OMR விடைத்தாளில் present P என கருப்பு மையினால் நிழற்படுத்த வேண்டும். வருகைபுரியாத தேர்வர்களின் OMR விடைத்தாளில் **<u>Absent A</u> என கருப்புநிற பந்து முனை பேனாவினால்** நிழற்படுத்த வேண்டும்.

9. **<u>மாணவர்களுக்கு வழங்கப்பட்ட OMR Answer Sheet அவர்களுடைய பதிவெண்ணிற்குரியவைதானா என்பதை உறுதி செய்து கொண்டு மாணவர் மற்றும் அறை கண்காணிப்பாளர் கையொப்பமிட வேண்டும்.</u>**

10. நுழைவுச்சீட்டில் புகைப்படம் மாறியிருந்தாலோ அல்லது புகைப்படம் இல்லாமல் இருந்தாலோ, அதே நுழைவுச்சீட்டில் **உரிய தேர்வரின் புகைப்படம் ஒட்டி அதில் பள்ளித்தலைமையாசிரியர் / முதல்வர் முத்திரையுடன் சான்றொப்பம் பெற வேண்டும்.**

11. **தேர்வு நாளன்று வழங்கப்படும் OMR Sheet லும் புகைப்படம் மாறி / இல்லாமல் இருந்தால், பெயர் பட்டியலில் ( NR) மட்டுமே உரிய புகைப்படத்தினை பசையினால் ஒட்டி (நுழைவுச்சீட்டுடன் ஒப்பிட்டு) தேர்வர்களை தேர்வெழுத அனுமதிக்க வேண்டும் என முதன்மைக் கண்காணிப்பாளருக்கு அறிவுரை வழங்க வேண்டும். OMR Sheet–ல் புகைப்படம் ஒட்டக் கூடாது.**

12. பெயர்ப்பட்டியலில் பெயர், **தலைப்பெழுத்து, பிறந்த தேதி, இனம் (Classification) ஆகியவற்றில் திருத்தம் ஏதேனும் இருப்பின் உரிய திருத்தம் செய்து சான்றொப்பமிட்டு, பெயர்பட்டியலின் இறுதியுள்ள Abstract–ஐ பூர்த்தி செய்து முதன்மைக் கண்காணிப்பாளரின் முத்திரை மற்றும் கையொப்பம் பெற்று OMR விடைத்தாட்களுடன் தேர்வு நாளன்றே ஒப்படைக்க வேண்டும்.**

13. **தேர்வு தொடங்கிய 30 நிமிடத்திற்குள் தேர்வு மைய தேர்வர்களின் வருகை (Present) (Absent) விபரத்தை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநருக்கு முதன்மைக் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்க வேண்டும்.**

14. **தேர்வு முடிந்தவுடன் , வழித்தட அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தேர்வு மையங்களிலிருந்து விடைத்தாள் (OMR) / மீதமுள்ள வினாத்தாள் கட்டுக்களை பெற்று, முதன்மைக் கல்வி அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்,முதன்மைக் கல்வி அலுவலர்களுடன் இணைந்து தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள மைய வாரியப் பட்டியலுடன் ஒப்பிட்டு சரிபாத்து கொள்ள வேண்டும். முதன்மைக் கல்வி அலுவலர்கள் OMRவிடைத்தாள்கட்டுகளை Logistics Lorry– ல் அனுப்பும் வரைஉரிய பாதுகாப்பு வசதியுடன் வைத்துக் கொள்ள வேண்டும்.**

**சென்னை, முதன்மைக் கல்வி அலுவலகத்தைத் தவிர்த்து, இதர முதன்மைக் கல்வி அலுவலர்கள் விடைத்தாள் கட்டுக்களை கீழ்க்காணும் வழித்தடங்களில் பாதுகாப்பாக** Logistics Lorry **ல் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்காக** Logistics Lorry **சேவை இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்படும்.**

**நாகர்கோவில், விருதுநகர், நீலகிரி, தர்மபுரி, மற்றும் நாகப்பட்டினம் முதன்மை கல்வி அலுவலர்கள்** விடைத்தாள் கட்டுக்களை 15.10.2023 அன்று Logistics Lorry மூலம் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலக பணியாளர் மற்றும்ஆயுதம் தாங்கிய காவலர் ஒருவருடன் **மாலை 3.00 மணிக்கு** கீழ்க்குறிப்பிட்டுள்ள வழித்தடங்களில் உள்ள முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் உள்ள மந்தணக் கட்டுகளை பெற்று பாதுகாப்பாக அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(குறிப்பு : சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் Logistics Lorry மூலம் OMR விடைத்தாட்களை தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்க ஆயுதம் தாங்கிய காவலர் ஒருவரை ஏற்பாடு செய்ய வேண்டும்.)

**வழித்தடம்**

| ROUTE I | ROUTE II | ROUTE III1 | ROUTE IV | ROUTE V |
|---|---|---|---|---|
| NAGERCOIL | VIRUDHUNAGAR | OOTY | DHARMAPURI | NAGAPATTINAM |
| TIRUNELVELI | MADURAI | COIMBATORE | KRISHNAGIRI | TIRUVARUR |
| TENKASI | THENI | TIRUPPUR | TIRUPATTUR | MYLADUDURAI |
| TUTICORIN | DINDIGUL | ERODE | TIRUVANNAMALAI | THANJAVUR |
| RAMANATHAPURAM | KARUR | NAMAKKAL | VELLORE | ARIYALUR |
| SIVAGANGAI | TRICHY | SALEM | RANIPET | CUDDALORE |
| PUDUKOTTAI | PERAMBALUR | KALLAKURICHY | KANCHIPURAM | VILLUPURAM |
| | CHENGALPATTU | | THIRUVALLUR | |

**சென்னை, முதன்மைக் கல்வி அலுவலர்** மட்டும் தேர்வு நாளான 15.10.2023 அன்று மதியம் 2.00 மணிக்குள் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகத்தில் நேரடியாக துணை இயக்குநர் (பல்வகை தேர்வுகள்) அவர்களிடம் மந்தணக் கட்டுகளை ஒப்படைக்க வேண்டும்.

**ஒப்படைக்க வேண்டிய ஆவணங்களின் விவரம்**

| **திருப்பி அனுப்பி வைக்க வேண்டிய பொருட்களின் விவரம்** | **அமைய வேண்டிய கட்டுக்கள்** | **ஒப்படைக்க வேண்டிய அலுவலகம்** |
|---|---|---|
| 1.i) உபயோகிக்கப்பட்ட விடைத்தாட்கள் (Used O.M.R.AnswerSheet) **(PACKET – I)** | இம்மூன்று கட்டுகளையும் (Packet – I, II, III) துணிப் பையைக் கொண்டு ஒரே கட்டாக கட்டி அரக்கு முத்திரையிட்டப்பட வேண்டும் | வழித்தட அலுவலர் மூலம் சம்பந்தப்பட்ட முதன்மை கல்வி அலுவலர்அலுவலகத்தில் (வினாத்தாள் கட்டு காப்பு மையம்)ஒப்படைக்க வேண்டும். |
| 2. உபயோகிக்கப்படாத விடைத்தாட்கள் (Unused OMR Answer Sheets) **(PACKET – II)** | | |
| 3. திருத்தப்பட்ட பெயர் பட்டியல் (Corrected Nominal Roll) **(PACKET – III)** | | |
| 4. உபயோகிக்கப்படாத வினாத்தாள் புத்தகங்கள் (Unused Question Booklets) | தனிக்கட்டு | சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் – **Unused Question Booklets தான் உள்ளதா என்பதை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் சரிபார்த்து பெற்றுக் கொள்ள வேண்டும்.** இந்த கட்டினை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலேயே வைத்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். |
| 5.பற்றொப்பச்சீட்டு | படிவம் 2–ன்படி | தேர்வு முடிந்த அன்றே பற்றொப்பச் சீட்டுகள் **அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்,** |

**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு :** தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கான மற்றும் தேர்வு அறைக் கண்காணிப்பாளர் முக்கிய அறிவுரைகள்

**நகல்:**

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் – உரிய நடவடிக்கைக்காக
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள். – உரிய நடவடிக்கைக்காக

**<u>தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு முக்கிய அறிவுரைகள்:</u>**

1. 15.10.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை தேர்வு நடைபெறும்.

2. 15.10.2023 அன்று நடைபெறவுள்ள தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு வினாத்தாள் கட்டுக்களை தங்கள் மைய **வழித்தட** அலுவலரிடமிருந்து 8.45 மணிக்குள் பெற்று உரிய அலமாரியில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

3. கருப்பு மை கொண்ட பந்துமுனை (பால்பாயின்ட்) பேனாக்களை கையிருப்பில் வைத்திருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.
4. மாணவர்கள் அருகருகில் இருப்பதை தவிர்க்க தேர்வு மையத்தில் இரண்டு அல்லது மூன்று இடங்களில் Seating Plan ஐ அமைக்க வேண்டும்.
5. தேர்வுமைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் தேர்வறை கண்காணிப்பாளர்களுக்கு தேர்வு நடத்துதல் குறித்த அறிவுரைகளை 09.15 மணிக்கு வழங்க வேண்டும்.
6. தேர்வு அறை கண்காணிப்பாளர்களிடமிருந்து அலைபேசியினை பெற்று தேர்வு முடிந்த பிறகுதான் அதனை அவர்களுக்கு வழங்க வேண்டும்.
7. தேர்வறைக் கண்காணிப்பாளர்களை 9.30 மணிக்கு தேர்வறைக்கு அனுப்ப வேண்டும்.

8. தேர்வர்களை 9.40 மணிக்கு தேர்வறைக்குள் அனுமதித்து, தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை சரிபார்த்து உரிய இருக்கையில் அமர வைக்க அறை கண்காணிப்பாளருக்கு அறிவுறுத்த வேண்டும்.
9. 9.45 மணிக்கு வினாத்தாள் கட்டு பிரிக்கப்பட்டு தேர்வறை கண்காணிப்பாளர்களுக்கு 9.50–க்குள் வழங்கப்பட வேண்டும்.
10. தேர்விற்கான வினாத்தாட்கள் 9.55 மணிக்கு அறைக் கண்காணிப்பாளர்களால் வினாத்தாள் உறை பிரிக்கப்பட்டு 10.00 மணிக்கு தேர்வர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
11. தேர்வு முடிந்தவுடன் 12.00 மணிக்கு தேர்வர்களிடமிருந்து OMR விடைத்தாட்களை சரிபார்த்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
12. தேர்வு முடியும் வரை எக்காரணம் கொண்டும் தேர்வர்களை தேர்வு மையத்தினை விட்டு வெளியே செல்ல அனுமதிக்க கூடாது.
13. தேர்வர்கள் தங்களுடன் தண்ணீர் பாட்டில் (Transparent Water Bottle only)/ கை கிருமிநாசினி (Hand Sanitizer) எடுத்து வந்திருந்தால், அதனை தேர்வறைக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

14. கழிப்பறைகள் நன்றாக சுத்தம் செய்து கிருமி நாசனி தெளித்து சுத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

15. தேர்வு முடிவடைந்த பின்பு தேர்வர்களை போதிய இடைவெளியுடன் தேர்வு மையத்தை விட்டு அனுப்பி வைக்க அறிவுறுத்த வேண்டும்.

16. **பெயர் பட்டியலில் திருத்தத்தினையும் சரிவர மேற்கொள்ளப்பட வேண்டும். திருத்தம் அனைத்தும் சிவப்பு மையினால் மட்டுமே செய்யப்பட வேண்டும். மேலும் வருகைப்புரிந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் OMR விடைத்தாட்கள் சரிபார்க்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

17. அறைக் கண்காணிப்பாளர் தேர்வர்களின் பதிவெண் மற்றும் பெயர் ஆகிய கலங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்த பின் கையொப்பமிட வேண்டும் என்ற அறிவுரையை தவறாது பின்பற்றுமாறு தேர்வு அறைக் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

18. தேர்வு முடிந்தவுடடன் முதன்மைக் கண்காணிப்பாளர்கள் கீழ்க்குறிப்பிட்ட படிவத்தினை பூர்த்தி செய்து Packet – III உடன் இணைத்தனுப்ப வேண்டும்.

Format – 1

| Centre No.& Name | Total No. of Registered Candidates | Total No. of Present Candidates (used OMR) | Total No. of Absent Candidates (unused OMR) | Total No. of Blank OMR (unused OMR) |
|---|---|---|---|---|
| | | | | |

Format – 2

| Centre No.& Name | Total No. of Question papers received | Total No. of Question papers used (Present) | Total No. of balance Question papers |
|---|---|---|---|
| | | | |

19. **தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்விற்கு பணிபுரிந்த முதன்மைக் கண்காணிப்பாளர், துறை அலுவலர், அறைக் கண்காணிப்பாளர் மற்றும் அலுவலக பணியாளர்களின் உழைப்பூதியம் பற்றொப்பச்சீட்டுகள் இணைப்பிலுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து அந்தந்த மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களில் 15.10.2023 அன்று ஒப்படைக்க வேண்டும்.**

20. **தேர்வு முடிந்தவுடன் சம்பந்தப்பட்ட வழித்தட அலுவலர்களிடம் கீழ்க்குறிப்பிட்டவாறு விடைத்தாள் கட்டுக்களை ஒப்படைக்க வேண்டும்.**

21. **தேர்வு மைய முதன்மை கண்காணிப்பாளர்கள் திருப்பி ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள்**

| திருப்பி அனுப்பி வைக்க வேண்டிய பொருட்களின் விவரம் | அமைய வேண்டிய கட்டுக்கள் | முகவரி |
| --- | --- | --- |
| 1.i) உபயோகிக்கப்பட்ட விடைத்தாட்கள்<br>(Used O.M.R.AnswerSheet)<br>**(PACKET – I)**<br>2. உபயோகிக்கப்படாத விடைத்தாட்கள்<br>(UnusedOMR Answer Sheets)<br>**(PACKET – II)**<br>3. திருத்தப்பட்ட பெயர் பட்டியல்<br>(Corrected Nominal Roll)<br><br>4. FORMAT – 1 மற்றும் 2<br>**(PACKET – III)** | இம்மூன்று கட்டுகளையும் (Packet – I, II, III) துணிப் பையைக் கொண்டு ஒரே கட்டாக கட்டி அரக்கு முத்திரையிட்டப்பட வேண்டும் | வழித்தட அலுவலர் மூலம் சம்பந்தப்பட்ட முதன்மை கல்வி அலுவலர்அலுவலகத்தில் (வினாத்தாள் கட்டு காப்பு மையம்) ஒப்படைக்க வேண்டும்.<br>(படிவம் 1 ன்படி) |
| 5. உபயோகிக்கப்படாத வினாத்தாள் புத்தகங்கள்<br>(Unused Question Booklets) | தனிக்கட்டு | சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் – **Unused Question Booklets தான் உள்ளதா என்பதை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் சரிபார்த்து பெற்றுக் கொள்ள வேண்டும்.**<br>இந்த கட்டினை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலேயே வைத்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். |
| பற்றொப்பச்சீட்டுகள் | பற்றொப்பச் சீட்டு மாதிரி படிவம் இணைக்கப் பட்டுள்ளது | சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் |

**ஒம்/–**
**இயக்குநர்**

**தேர்வு அறைக் கண்காணிப்பாளர்களுக்கு முக்கிய அறிவுரைகள்:**

1. தேர்வறைக் கண்காணிப்பாளர்கள் 9.30 மணிக்கு தேர்வறைக்கு செல்ல வேண்டும்.
2. 15.10.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை தேர்வு நடைபெறும்.
3. தேர்வர்களை 9.40 மணிக்கு தேர்வறைக்குள் அனுமதித்து, தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை சரிபார்த்து உரிய இருக்கையில் அமர வைக்க வேண்டும்.
4. தேர்வர்கள் தேர்வறைக்கு வந்தவுடன் தேர்வுகூட நுழைவுச்சீட்டினை சரிபார்த்து அவர்களுக்குண்டான OMR விடைத்தாட்களை வழங்க வேண்டும்.
5. 9.45 மணிக்கு வினாத்தாள் உறை பெறப்பட்டு, 9.55 மணிக்கு அறைக் கண்காணிப்பாளர்களால் வினாத்தாள் உறை பிரிக்கப்பட்டு 10.00 மணிக்கு தேர்வர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
6. **தேர்வர்கள் எக்காரணம் கொண்டும் வினாத்தாள் புத்தகத்தில் (Question Booklet) விடைகளைக் குறிக்க வேண்டாம் என்றும், வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் மட்டுமே (OMR Answer Sheet) விடைகளைக் குறிக்க வேண்டும் என்பதனையும் தேர்வர்களுக்கு தேர்வு அறைக் கண்காணிப்பாளர்கள்அறிவுறுத்தல் வேண்டும்.**
7. ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 20 மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 20 வினாத்தாள் மற்றும் விடைத்தாள் மட்டுமே வழங்கப்படும். எனவே எக்காரணம் கொண்டும் 20 மாணவர்களுக்கு குறைவாகவோ அல்லது அதற்கு மேலோ ஒரு தேர்வறையில் அமர அனுமதிக்கக்கூடாது. (கடைசி அறை தவிர)
8. தேர்வு முடிந்தவுடன் தேர்வர்கள் வினாத்தாள் புத்தகத்தை (Question Booklet) எடுத்துச் செல்லஅனுமதிக்க வேண்டும்.
9. இத்தேர்விற்கு (OMR ANSWER SHEET) விடைத்தாள் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தேர்வர்கள் விடைத்தாளில் உள்ள கலங்களைப் பூர்த்தி செய்வது குறித்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளன. அனைத்து தேர்வறைகளிலும் தேர்வர்கள் விடைத்தாட்களைப் பூர்த்தி செய்வது குறித்த அறிவுரைகளைத் தேர்வு அறைக் கண்காணிப்பாளர்கள் மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். தவிரவும் ஒவ்வொரு விடைத்தாளில் தேர்வர் தேர்விற்கு வருகைபுரிந்த விவரம் (Status of Candidate) 'P' Or 'A' என கருப்பு நிற மையினால் அறை கண்காணிப்பாளரால் (Hall Supervisor) நிழற்படுத்த வேண்டும்.

10. அறைக் கண்காணிப்பாளர் தேர்வர்களின் பதிவெண் மற்றும் பெயர் ஆகிய கலங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்த பின் அவர் கையொப்பமிட வேண்டும். தேர்வர்கள் OMR விடைத்தாளில் தாம் எந்த கலத்திற்கான விடை சரி என நினைக்கிறாரோ அந்த கலம் **கருப்பு மை கொண்ட பந்துமுனை (பால் பாய்ண்ட்) பேனாவினால் மட்டுமே நிழற்படுத்தப்பட வேண்டும் என தேர்வர்களுக்கு தேர்வு அறைக் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தல் வேண்டும்.**

11. பெயர் பட்டியலில் திருத்தத்தினையும் சரிவர மேற்கொள்ளப்பட வேண்டும். திருத்தம் அனைத்தும் சிவப்பு மையினால் மட்டுமே செய்யப்பட வேண்டும். மேலும் வருகைப்புரிந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் OMR விடைத்தாட்கள் சரிபார்க்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

12. தேர்வு முடிந்தவுடன் 12.00 மணிக்கு தேர்வர்களிடமிருந்து O.M.R விடைத்தாட்களை சரிபார்த்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

13. மேலும் தேர்வினை நல்ல முறையில் நடத்திட வேண்டும்.

**ஒம்/-**
**இயக்குநர்**

# கட்டின் மேல் எழுத வேண்டிய விவரங்கள்

## தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வு – அக்டோபர் 2023

பெறுநர்:

இணை இயக்குநர் (மேல்நிலை)
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006

தேர்வர்களின் எண்ணிக்கை:
வருகை புரிந்தோர் எண்ணிக்கை:
வருகை புரியாதோர் எண்ணிக்கை:

அனுப்புநர்:

தேர்வு மைய எண்:

தேர்வு மைய பெயர்:

தேர்வு மைய முகவரி:

துறை அலுவலர்
கையொப்பம்

தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்
முத்திரை மற்றும் கையொப்பம்

## பற்றொப்பச்சீட்டு(மாதிரிப்படிவம்)
## தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு - 2023

வருவாய் மாவட்டம் : தேர்வர்களின் எண்ணிக்கை :

தேர்வு மையம் எண் & பெயர் :

| வ. எண் | பெயர் | தேர்வு பணி | உள்ளூர் / வெளியூர் தொகை | தொகை | கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| 1 | | முதன்மை கண்காணிப்பாளர் | 106 / 106 | | |
| 2 | | துறை அலுவலர் | 66 / 106 | | |
| 3 | | அறை கண்காணிப்பாளர் | 53 / 80 | | |
| 4 | | " | 53 / 80 | | |
| 5 | | " | 53 / 80 | | |
| 6 | | " | 53 / 80 | | |
| 7 | | " | 53 / 80 | | |
| 8 | | " | 53 / 80 | | |
| 9 | | " | 53 / 80 | | |
| 10 | | " | 53 / 80 | | |
| 11 | | " | 53 / 80 | | |
| 12 | | எழுத்தர் | 53 | | |
| 13 | | அலுவலக உதவியாளர் | 27 | | |
| 14 | | தண்ணீர் வழங்குபவர் | 20 | | |
| 15 | | துப்புரவாளர் | 20 | | |
| 16 | | பெருக்குபவர் | 20 | | |
| | | மொத்த தொகை | | | |

எழுத்தால்( )

முதன்மை கண்காணிப்பாளர்
முத்திரை மற்றும் கையொப்பம்